பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 10 திங்கட்கிழமை (25-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 29

# ஆயுத கொள்வனவில் பெரும் ஊழல்
# அம்பலப்படுத்த ஐ. தே. கட்சி முயற்சி!

## முக்கிய அரசுப் பிரமுகர் சம்பந்தம் எனத் தகவல்

கொழும்பு, டிசம்பர் 25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் முப்படையினருக்கும் என வெளிநாட்டிலிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதில் பெரும் ஊழல் இடம்பெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அரசுடன் தொடர்புடைய முக்கிய பிரமுகர் ஒருவரே ஊழலில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் —

இந்த ஊழலை மக்களுக்கு அம்பலப்படுத்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முயன்று வருவதாகவும் —

கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆயுதக் கொள்வனவு மோசடி பற்றிய விவரங்கள் சில மாதங்களுக்கு முன்னரே ஐ.தே.கவின் வசம் சிக்கிவிட்டன என்றும் —

எனினும் அதனை ஐ.தே.க. அம்பலப்படுத்துவதற்கு இடையில் இராணுவச் செய்திகள் மீதான தணிக்கையைப் பிறப்பித்ததன் மூலம் அந்த முயற்சியை அரசு தடுத்துவிட்டது என்றும் —

விடயமறிந்த கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த செப்டெம்பரில் இருபது லட்சம் அமெரிக்க டொலர் (சுமார் பத்துக் கோடி ரூபா) செலவில் சீனாவிடமிருந்து ஆயுதங்களை வாங்க முயற்சி எடுக்கப்பட்டது என்றும் —

இந்தக் கொள்வனவு தொடர்பான ஏற்பாடுகளில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திவெளியில் புலிகள் அள்ளிய ஆயுதங்கள்

சாவகச்சேரி, டிச. 25

மட்டக்களப்பு சந்திவெளியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரத் தாக்குதலில் ஏ. கே. எல். எம். ஜி. உட்பட 21 துப்பாக்கிகளையும், ஆர். பி. ஜி. மற்றும் ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். அவற்றின் விவரம் வருமாறு;-

| | |
|---|---|
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — 01 |
| ★ ஆர். பி. ஜி. | — 01 |
| ★ உயர்வலு தொலைத் தொடர்பு சாதனம் | — 02 |
| ★ ஏ. கே. ரக துப்பாக்கி | — 20 |
| ★ ஆர். பி. ஜி. ஷெல் | — 04 |
| ★ புறொப்லர் | — 05 |
| ★ மினி மினி பரல் | — 01 |
| ★ ஏ. கே. மகஸின் | — 04 |
| ★ ஏ. கே. எம். ஜி. லிங் | — 345 |
| ★ நடுத்தர ரவை | — 701 |

(உ-3)

## 3 போராளிகள் வீரச்சாவு

சாவகச்சேரி, டிச. 25

நேற்று முன்தினம் மட்டக்களப்பு சந்திவெளியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரத் தாக்குதலில் புலிகள் தரப்பில் 3 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.45 மணியளவில் கிரான் இராணுவ முகாமில் இருந்து சந்திவெளி நோக்கி பெரும் எண்ணிக்கையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது ஒரக்கல்விமடுவில் வைத்து விடுதலைப் புலிகள் வெற்றிகரத்தாக்குதல் ஒன்றை நடத்தியது தெரிந்ததே.

இத்தாக்குதலில் 32 படையினர் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்தபோதும் —

34 படையினர் கொல்லப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இந்த வெற்றிகரத் தாக்குதலில் போராளிகளான மேஜர் புஷ்பகுமார், கப்டன் ராஜேஸ், பெண் போராளியான 2 ஆம் லெப்டினன்ட் தமிழ்வாணி ஆகியோர் வீரமரணமடைந்தனர். (உ-3)

## நாளை முதல் யாழ். - வன்னி தொடர்பு சேவை

சாவகச்சேரி, டிச. 25

யாழ். — வன்னி தொடர்புச் சேவை மீண்டும் நாளை முதல் இயங்கவிருக்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சேவையின் அலுவலகங்கள் தென்மராட்சியில் சாவகச்சேரியில் தமிழீழ நீதிமன்றத்துக்கு அருகில் தேவாலய ஒழுங்கையிலும் —

கிளிநொச்சியில் தபாலகத்துக்கு அருகிலும் அமைந்துள்ளன

வலிகாமம் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து இச்சேவை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (உ)

## ம.எண்ணெய் சவர்க்காரம் விநியோகம்

சாவகச்சேரி, டிச. 25

புதனன்று வந்துசேரும் என — எதிர்பார்க்கப்படும் ''மாஹோ'' கப்பலில் ஏற்றி வரப்படும் மண்எண்ணெய், சவர்காரம் ஆகியன பங்கீட்டு அடிப்படையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தின் இரு மாதக் கோட்டாவுக்கான மண்எண்ணெய் இக்கப்பலில் எடுத்துவரப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய கிறிஸ்தோதயத் திருநாளில்

வாசகர்கள், விளம்பரதாரர்கள்,
செய்தியாளர்கள், விற்பனையாளர்கள்,
ஆதரவாளர்கள், அபிமானிகள், அன்பர்கள்

அனைவருக்கும்

உதயனின்

நத்தார் நல்வாழ்த்துக்கள்

உரியனவாகுக!

### ஏக காலத்தில் மணிகள் ஒலிக்க

## இந்துக் கோவில்களில் நேற்று விசேட வழிபாடு

சாவகச்சேரி, டிச. 25

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெற வேண்டியும் —

லட்சக் கணக்கில் ஏதிலிகளாக்கப்பட்ட தமிழீழ மக்களின் சுதந்திர நல்வாழ்வுக்கு ஆத்ம நிறைவை வேண்டியும் —

இந்து ஆலயங்களில் நேற்று விசேட வழிபாடுகளும், பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் உள்ள சகல இந்து ஆலயங்களிலும் காலை 9 மணி தொடக்கம் இந்த விசேட வழிபாடுகள் இடம் பெற்றன.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் இந்தக் கூட்டு வழிபாட்டு நிகழ்வுகளில் பக்தி பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

அனைத்து இந்து ஆலயங்களிலும் ஏக காலத்தில் மணிகள் ஒலிக்கப்பட்டன; வேத தோத்திர பாராயணம், தேவாரம், திருவாசகம் ஓதும் நிகழ்வுகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

(ஐ-31-173)

### ★ ஒரு வார காலத்துக்குள்

## கொழும்பில் இரவுத் தேடுதல்களில் 3 ஆயிரத்துக்கும் அதிக தமிழர் கைது!

சாவகச்சேரி, டிச. 23

கொழும்பில் கடந்த வாரம் இரவு வேளைகளில் ஸ்ரீலங்கா படையினர் நடத்திய தேடுதல் வேட்டைகளின் போது 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டதாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இரவு நேரம் படுக்கைகளில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலீஸ் நிலையங்களில் கமராக்கள் முன்நிறுத்தப்பட்டு வீடியோ, புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றனர்.

அவர்களின் கைவிரல் அடையாளத்தையும் பொலீஸார் பதிவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ஹபரணவில் சர்வதேச அதிகாரிகள்

சாவகச்சேரி, டிச. 25

எதிர்வரும் வியாழக் கிழமை பருத்தித்துறைக்கு வரவிருக்கும் 'ஹபரண' கப்பலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் வரவிருக்கின்றனர்.

விடுமுறையில் சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதி ஜோர்ச் குன்ஸ், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். அலுவலக [illegible] ஆகியோர் வரவிருக்கின்றனர்.

(உ-3)

## யாழ்ப்பாணத்தை ராணுவம் அழித்துவிட்டது

### ஐ.நா.செயலருக்கு வை.கோ. கடிதம்

சாவகச்சேரி, டிச. 25

கலாசார சிறப்பு மிக்க யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்கா இராணுவம் சிரழித்து விட்டதுஎன மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி ஐ. நா. செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்கும் போரில் ஸ்ரீலங்கா அரசு தமிழரின் கலாசார சிறப்பு மிக்க யாழ்ப்பணத்தை ஷெல்கள் மூலமும், விமானத் தாக்குதல் மூலமாகவும் அழித்துள்ளது. அத்துடன் அங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### எம் இரத்தத்தின் இரத்தமே!

தமிழனுக்கு ஒரு நாடில்லை; சுதந்திரமாய் குடியிருக்க ஒரு கூடில்லை; தமிழனாகப் பிறந்ததற்காக நிம்மதியான வாழ்வில்லை. இந்த அவல நிலையை மாற்றப் போவது தமிழீழம் தான் என்பதை நீ சரியாகப் புரிந்து கொண்டாய். தமிழன் என்றால் உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் உணர்வால் ஒன்று பட்டவன் என்ற தத்துவத்துக்கு நீ புத்துயிர் ஊட்டி விட்டாய்.

உன் நினைவால் நெஞ்சமதை நிறைக்கும்

கைதடி வணிகர் மன்றம்.

(39669)

## றெனி மூக்குக் கண்ணாடி அகம்

கண் பரிசோதித்துக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

கண்டி வீதி, (யோகா மருந்தகம் உள்ளே) — சாவகச்சேரி.

இந் நன்நாளிலே வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
உறவினர்கள் அனைவருக்கும்

★★ எமது நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள் ★★

(39692)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வல்லிபுரம் குமாரசாமி

(முன்னை நாள் பொலீஸ் உத்தியோகத்தர்)

மலர்வு: 12-02-1938 உதிர்வு: 04-01-1995

திருமதி

### இராசம்மா குமாரசாமி

மலர்வு: 05-01-1941 உதிர்வு: 28-11-1994

எம் இதயங்களில் நிலைத்து நிற்கும் அப்பா! அம்மா! நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும் எங்களுடன் என்றும் இருக்கின்றீர்கள் உங்கள் பாசமும் பிரிவும் என்றும் எங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மசாந்திக்காக என்றென்றும் பிரார்த்தித்து நீங்கா நினைவுகளுடன் வாழும்.

திரவி ஆனந்தம்
சுபந்தினி
நந்தினி — பிள்ளைகள்

தற்போதய முகவரி:–
C/o இ. சுப்பிரமணியம்,
மாறன் வீதி,
மட்டுவில் வடக்கு.

சிறுப்பிட்டி மத்தி,
அம்மன் கோவிலடி, நீர்வேலி.

(39590)

## தொடர்பு கொள்ளவும்

வண்ணான் துறை, மல்லாகம் புகையிரத நிலைய அருகாமையில் வசித்த காலஞ்சென்ற செ. சபாபதிப் பிள்ளையின் மகள் திருமதி ஜெயராணியும், தற்பொழுது மட்டுவிலில் ஒன்றாக வசிக்கும் மகன் சதானந்தனும், மக்கள் புஷ்பம் விசியும் உடனடியாக சுவாமி சித்ரூபானந்தாவுடன் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா
சேவ ஆச்சிரமம்
பருத்தித்துறை.

## அஞ்சலிக்கின்றோம்

### சின்னையாப்பிள்ளை இரட்ணவடிவேல்

எமது வகுப்பு மாணவன்
செல்வன் இ. அருள்வேலின் தந்தையாரின்
மறைவையொட்டி வேதனையில் வாடும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சக மாணவர்கள், நண்பர்கள்.
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

[39691]

## கரை ஒதுங்கிய 6 இலங்கையர்

சென்னை, டிச. 25

தமிழ்நாடு கன்னியாகுமரி கடற்கரையில் நேற்றுக்காலை கரை ஒதுங்கிய இலங்கைப் படகு ஒன்றை கரையோர காவல்துறையினர் கைப்பற்றியுள்ளார்கள்.

அந்தப் படகில் இருந்த ஆறுபேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் —

இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் — காவல்துறையினர் தெரிவித்தனர். (உ-7)

## ஆசிரிய கலாசாலை பரீட்சை

கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் வருடாந்த இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## கடும் வரட்சி

கிளிநொச்சி, டிச. 25

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட மழை இல்லாததால் பெரும் வரட்சி நிலவுகிறது.

வடமராட்சியில் சில பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால் நெற் பயிர்கள் கருகி விட்டன. விவசாயிகள் இவற்றைக் கைவிட்டிருப்பதால் சில இடங்களில் மாடுகளும் இவற்றை மேய்ந்து வருகின்றன.

கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தில் தண்ணீர் குறைந்து வருகிறது. மழை பெய்யாததால் வழமைக்கு மாறாக காலபோகச் செய்கைக்காக இக் குளம் திறந்து விடப்பட்டுள்ளது.

குளங்களைத் திறந்து விடும் போது அவற்றை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. கிணறுகளிலும் நீர் மட்டம் குறைந்துள்ளது. (இ-ரி)

## இடமாற்றம்

இணுவில் ஆஸ்பத்திரிக்கு அருகில் இயங்கி வந்த 'நியூ லிங்கம்' சலூன் தற்போது சாவகச்சேரி பெருங்குளம் கல்வயல் வீதியில் இயங்குகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
வே. தியாகராசா
(சி/3082)

## 33 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

### கனகசபை சண்முகசுந்தரம்

(உரிமையாளர், சிவன் மோட்டோஸ்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

மலர்வு: 02-11-1941 உதிர்வு: 23-11-1995

தாய்க்கு தலைமகனாய் பிறந்து வந்தாய்
தந்தைபோல் என்னை நீ காத்துவந்தாய்
தாயை இழந்து நான் தவிக்கையிலே
தாயாக என்னை நீ அணைத்திருந்தாய்

சோர்ந்த முகம்கண்டு நீ கலங்கிடுவாய்
என்னை சேராது துன்பம் தனை தீர்த்திடுவாய்?
பசுவை இழந்த கன்றுபோல் நான் கலங்க
என்னை தவிக்கவிட்டு அண்ணா நீ எங்கு சென்றாய்?

தாயின்முகம் நிழலாட தந்தைமனம் உறவாட
அண்ணனா நீ பிறந்து வந்தாய்
தம்பி நொந்துமனம்வாட உற்றார் உறவினர் உனைதேட
அண்ணா நீ எங்கு சென்றாய்?

கொழும்பு நான் செல்கையிலே பாசமுடன் எனை அணைத்து
அன்னைபோல் உணவளித்த அண்ணனே
திரும்பி நான் வருகையிலே பாசமுள்ள அண்ணன் உனை
குண்டுருவில் அழைத்துச் சென்றான் காலனவனே.

### சண்முகசுந்தரம் சிவரூபன்

(யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி
ஆண்டு 7 A மாணவன்)

மலர்வு: 18-08-1983 உதிர்வு: 23-11-1995

பெற்றெடுத்து பெயருமிட்ட அன்னை கலங்கையிலே
சித்தப்பன் என் விழியும் சேர்ந்தே கலங்குதடா
பெத்த அப்பன் உன்னை சேர்த்தே அணைத்தானே
இருவருமாய் எங்கு சென்றீர் என் மகனே?

கல்விகற்று நீ சிறப்பாய் வாழ்கையிலே
களங்கம் இல்லா இன்பம்தனை காண்கையிலே
காலன் வந்தான் குண்டுருவில் உன் அருகினிலே
கலங்கவிட்டய் என்னை உன் நினைவினிலே.

சித்தப்பா என்று நீ அழைக்கையிலே
எத்துன்பமும் மறந்து நிற்பேன் உன் அருகினிலே
செத்த அப்பன் ஆனேனடா உன் நினைவினிலே
ஓடிவாடா டீக்கோ எந்தன் செல்லக்குட்டி.

யாழ்விட்டு உயிர் தப்ப ஓடி வந்தீர்கள் காலனவன் கவர்த்தானோ சாவகச்சேரியில் குண்டுருவில்?

உம் பிரிவால் வாடும்
அன்புள்ள தம்பி
**குணம்**

(39676)

உன் பிரிவால் வாடும்
அன்புள்ள
**குணம் சித்தப்பா**

## இன்று சதுர்த்தி தினத்தில் (25-12-1995)

# விடிவிளக்குகள் (பிற்பகல் 7 மணி)

யாழ். நகரை ஆக்கிரமித்துள்ள ஸ்ரீலங்காப் படையினர் பீதி கொண்டு சிதறி ஓடிட **பறாளாய் ஈசுர விநாயகரின்** அருள் வேண்டி ஏற்றி வைக்கப்படும்.

இடம்: **மணங்குணாப் பிள்ளையார் கோவில், நுணாவில்.** — சோழியூரான். (39581)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முழு மனித விடுதலைப் பயணத்தின் பகுதியே அடிமைத் தனத்துக்கு எதிரான போராட்டம்

பாவத்தின் அடிமைத் தனத்தில் துவண்ட மனிதனுக்கு முழு விடுதலை அளிக்க இறைவன் தாமே மனிதனானார். இறை மகன் யேசு கிறீஸ்து தமது வருகையாலும், பாடுகள் மரணத்தாலும், பாவத்தின் வேர்களை அறுத்தெறிந்து மனிதனுக்கு நீதி சமாதானம் நிறைந்த நித்திய வாழ்வை திறந்து வைத்தார்; அத்துடன் தனது வாழ்வில் ஊறி உறைந்திருக்கும் பாவத்தையும் அதன் அடிமைத் தனங்களையும் மனிதன் எவ்விதம் எதிர்த்துப் போராடி, நீதி சமாதானம் நிறைந்த நித்திய வாழ்வை தேடவேண்டுமென்றும் வழி காட்டினார். இவரின் மனித பிறப்பைத்தான் மார்கழி 25 ஆம் திகதி கிறீஸ்தவர்கள் ''கிறிஸ்மஸ்'' அல்லது ''நத்தார்'' விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

இச்சரித்திரம் படைத்த சம்பவத்தை நினைவு கூர அன்றைய பெத்லகேமின் தொட்டிலையும், அங்கிருந்த மிருகங்களையும் மேய்ப்பர்களையும், அங்கு அடைக்கலம் புகுந்த சூசை மரியாளையும், அவர்களுக்குப் பிறந்த யேசு பாலனையும், கிறீஸ்தவர்கள் படங்கள் அல்லது சொரூபங்கள் வழியாக ஒவியக் கற்பனை செய்து கோவிலினுள்ளும் வீட்டிலினுள்ளும் ''பாலன் பிறப்புத் தொட்டில்'' ஆக அமைத்து கொண்டாடுவது வழக்கம். சிறுவர்களுக்கு பெற்றோரும் ஆசிரியரும் தொட்டிலில் இருக்கும் படங்கள், சொரூபங்களினூடாக யேசுவின் பிறப்பு சம்பவத்தையும் அது நிகழ்ந்த சூழலையும் விளக்குவர். இன்னும் சிறுவர்களும் பெரியவர்களும் கூட்டம் கூட்டமாக பாடி (கரோல்ஸ்) மகிழ்ந்து கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைப் பரிமாறுவார்கள். கிறீஸ்தவர்கள் மாத்திரமல்ல பல்வேறு பட்ட மதங்களைச் சார்ந்தவர்களும் இந்நினைவு விழாவில் பலவிதமாகப் பங்குபற்றி பயன்பெறுவர்.

> **மனிதனுக்கு முழு விடுதலை அளிக்க இறைவன் தாமே மனிதரானார்!**

*1995ஆம் ஆண்டின் கிறீஸ்து* பிறப்பு விழாவைத் தமிழ் கிறீஸ்தவர்களும் அவர்களது உடன்பிறப்புக்களான இந்து சகோதரர்களும், முன்னொரு பொழுதும் அனுபவியாத சூழலிலும் மனநிலையிலும் அனுட்டிக்க அழைக்கப்படுகின்றனர். இப்பிறப்பு விழாவை பாரம்பரிய முறையிலே மகிழ்ச்சி நிறைந்த களியூட்டு விழாவாகக் கொண்டாட வழியுமில்லை வசதியுமில்லையே என்று நம்மில் பலர் பெருமூச்சு விடக்கூடும்; மனம் வாடி வதைந்து வேதனைப் படக்கூடும். இது நமது யதார்த்த நிலை.

ஆனால் இந்த யதார்த்த நிலைக்குள்ளேயே நின்று கொண்டு, பெருந் தன்மையுடனும் நம்பிக்கையுடனும் மேலெழுந்து, குறுகிய பார்வையைத் தவிர்த்து, சற்று பரந்த பார்வையில், (விசுவாசப் பார்வையில்) எம்மையும், எமது சூழலையும், சமகால சம்பவங்களையும் சவால்களையும் உன்னிப்பாக நோக்குவோமாயிருந்தால், ஒரு புரட்சிகரமான உண்மையைக் கண்டடைவோம்.

மேலும் எமது வேதனை நிறைந்த இந்நாட்களையும் குறுகிய கண்ணோட்டத்துடன் நோக்குவது கிறீஸ்தவ முறையல்ல. அப்படி செய்வது விசுவாசத்திற்கு முரணானது. கிறீஸ்தவ விசுவாசத்தின் நோக்கு என்பது இன்றைய சூழலையும், சமகால சம்பவங்களையும், அவற்றின் வெற்றி தோல்விகளையும், இன்ப துன்பங்களையும் எல்லாத் திட்டங்களுக்கும் மேலான இறைத் திட்டத்திற்குள் அல்லது அதன் பின்னணியில் வைத்துப் பார்ப்பது அல்லது வியாக்கியானம் செய்வதாகும்.

விசுவாச நோக்கில் யேசு கிறீஸ்து ஆரம்பித்த முழு மனித விடுதலைப் பயணத்திற்கும் எமது இன்றைய தமிழ் இன விடுதலைப் பயணத்திற்கும் உள்ள தொடர்பையும் இவை இரண்டிற்கும் உள்ளே நடந்து கொண்டிருக்கும் சமகால நிகழ்வுகளின் பொருளையும் நன்கு காண முடியும். எங்களுடைய பெருமூச்சுக்கள் துன்ப வேதனைகள் அனைத்தும் முழு மனித விடுதலைப் பயணத்திலும் இன விடுதலைப் பயணத்திலும் கருத்துள்ள உந்து சக்திகளாக மாற்றமடையும்; எமது மறை வாழ்வுப் பயணத்தையும் இனவாழ்வுப் பயணத்தையும் அவை துரிதப்படுத்தும்.

அரசியல் தலைவர்களோ அல்லது வேறு எந்த உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளோ முழு மனித விடுதலையை எமக்கு கொடுக்கவோ நிரந்தரமாக ஏற்படுத்தவோ முடியாது. இறைவன் ஒருவரே அதை செய்பவர். ஆனால் இறைவன் அளிக்கும் முழு மனித விடுதலைக்கும் இன்று எமது வாழ்வில் [illegible] — சம்பவங்கள் — சவால்கள் — வேதனைகள் இவைகளுக்கும் இருக்கும் தொடர்பை புரிந்து நடப்பதே விசுவாச வாழ்வு.

இவைகளுக்கிடையில் தொடர்பு இல்லை என்பது எமது விசுவாசத்திற்கு முரணானது.

எமது விசுவாசத்தின்படி கிறீஸ்து ஆரம்பித்த இறையரசை நிறைவாக அடைவதற்கு அவரே அடியிட்ட திருச்சபை அளிக்கும் இறை வார்த்தை, குழும வாழ்வு, வழிபாடு, அருட்சாதனங்கள் போன்றவை ஊட்டம் கொடுக்கும் உணவாகவும் உந்து சக்தியாகவும் செயற்படுகின்றன. இவைகளின் உதவியுடன் கோவிலுக்குள் இருந்து வாழ அல்ல இன்றைய உலகில் கிறீஸ்தவ விசுவாச கண்ணோட்டத்தில், முழு மனித விடுதலைக்காக யேசு ஆரம்பித்த இறை அரசை நோக்கி, விடுதலைப் பயணம் செய்யவே அழைக்கப்படுகின்றோம். இம் முழு மனித விடுதலைப் பயணத்திலே பல விதமான பாவ அடிமைத்தனங்களிலிருந்து எம்மை விடுவிக்க நாம் போராடவேண்டும்.

எமது மனிதத்துவ மதிப்பிற்கெதிராக, மாண்பிற்கெதிராக எத்தனையோ அடிமைத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

—அருட் கலாநிதி **எஸ்.ஜே. இமானுவேல்**

## மக்களின் விருப்பத்தை யேசு பூர்த்தி செய்வாராக!

''நமக்கொரு குழந்தை பிறந்துள்ளது
நமக்கொரு மகன் தரப்பட்டுள்ளார்....
அவருடைய பெயரோ அமைதியின் மன்னன்
என வழங்கப்படும்.'' *[இசையாஸ் — 9:6]*

இறைமகனாகிய யேசுகிறீஸ்துவின் மானிடப்பிறப்பை நினைவுகூரும் இந் நத்தார் பண்டிகையின் பொழுது இன்னல்கள் பல அனுபவித்து நிற்கும் எமது மக்களை நினைவுகூர்கின்றோம்.

இவ்வாண்டின் நடுப்பகுதியில் அமைதிக்கான பேச்சு வார்த்தை முறிவுற்று மீண்டும் போர் வெடித்தது. இதனால் ஏற்பட்ட அனர்த்தங்களால் எம் மக்கள் வீடிழந்து, உடமைகள் இழந்து, உடன் பிறப்புக்களையும் இழந்து தம் உயிர் காக்க ஒட வேண்டியிருந்தது. சென்ற மாத ஆரம்பத்தில் யாழ். மண்ணை ஆக்கிரமித்த இராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சி பல லட்சக்கணக்கான மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்கள் மத்தியில் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் இன்னும் அனுபவிக்கும் இன்னல்கள் ஏராளம். இந்நிலையில்தான் மீண்டும் கிறீஸ்துவின் பிறப்பை நினைவு கூருகின்றோம்.

அனைத்திலும் செல்வந்தராயிருந்தும் மக்கள் மீட்புக்காக எளிமையும், வறுமையும் உற்ற பாலன் யேசுவின் பிறப்பு அனைத்திலும் அகதிகளாக வெறுமையாக்கப்பட்ட எமக்கு தென்பும் ஆறுதலும் தருகின்றது.

மண்ணிழந்து, உடைமைகள் இழந்து, உடன் பிறப்புகளை இழந்து எங்கு அமைதி, எங்கு விடுதலை, எப்போது வீடு செல்வோம் என்று ஏங்கும் மக்கள் அனைவருக்கும் அமைதியின் அண்ணலாகிய யேசு இவ்வினிய நத்தார் காலத்தில் எமது ஆசைகளைப் பூர்த்தி செய்வாராக. மக்கள் மனதில் குரோதம், பகைமை, சுயநலம் அனைத்தும் தேய்ந்து சகோதரத்துவம், சமத்துவம், சமாதானப் பிரியம் ஆகிய நற்பண்புகள் தோன்றவும், ஒருவர் ஒருவரை ஏற்றுக்கொள்ளும் பரந்த மனம் அனைவருக்கும் எட்டவும், மக்களைப் பிரிக்கும் வேலிகள், தடுக்கும் மதில்கள் எல்லாம் கழன்று அச்சமின்றி உறவுகள் வரை பாலங்கள் அமைக்கப் படவும் யேசுவின் பிறப்பு அனைவருக்கும் சவாலாக அமையட்டும்.

சொல்லொண்ணா துன்பங்கள் மத்தியிலும் விடியலை நோக்கி ஏங்கி நிற்கும் தம் மக்கள் அனைவருக்கும் பாலகன் யேசு நிறைவாழ்வளித்திட வேண்டுகின்றேன்.

*— யாழ். ஆயர்*
*அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் —*

## தூதர்கள் பாடிய கானம் 'சமாதானம் உண்டாவதாக'

பெத்தலையில் பிறந்த எம் பாலகன் யேசு இன்றும் எங்கள் உள்ளத்தில் பிறக்கின்றார். அன்று அவர் பிறந்த பொழுது எவ்விதமான சூழ்நிலை உருவாயிருந்ததோ அதே சூழ்நிலைக்குள் நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்.

அன்று அந்தப் பாலகனுக்கு சத்திரத்தில் இடமில்லை இன்று தமது சொந்த வீட்டில் தங்குவதற்கு இடமில்லை.

அன்று உரோம ஆதிக்கம் வருத்தியது; இன்று எம் அரசு நம்மை நசுக்குகின்றது.

எப்படியிருந்தும் அன்று தூதர்கள் பாடிய கானம் இன்றும் எம்மத்தியில் ஒலிக்கின்றது. ''உன்னதத்தில் மகிமை பூமியில் சமாதானம் உண்டாவதாக'' என்று அவர்கள் பாடினார்கள்.

இன்றும் அந்த சமாதானம் உண்மையில் உருவாக வேண்டும். நீதியில் கட்டப்பட வேண்டும். அன்பினால் தாங்கப்பட வேண்டும். சுயாதீனமும் விடுதலையும் பிறக்க வேண்டும்.

'சமாதானம் உண்டாவதாக' என்று கூறி மெதடிஸ்த திருச்சபையினர் உங்கள் யாவரையும் வாழ்த்துகின்றனர்.

— அருட்திரு. எஸ். எஸ். கருணைராஜ்
முகாமைத்துவக்குரு,
மெதடிஸ்த திருச்சபை,
யாழ். சேகரம்.

## கிறிஸ்து ஜெயந்தியில் மனோதிடம் கிடைப்பதாக!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யேசு பிரான் பெத்லகேம் என்ற சிற்றூரில் பிறந்தார். தெய்வ மகனின் பிறப்பு மக்களெல்லாருக்கும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் அவசரமும், ஆத்திரமும், ஓட்டமும் நிறைந்த அக்காலகட்டத்திலே கிழக்கிலேயிருந்து வந்த மூன்று ஞானிகளும் சில ஆட்டு மேய்ப்பர்களுமே குழந்தை யேசுவைத் தரிசிக்கச் சென்றனர். மற்ற எல்லோருக்கும் அவசரம்; தேட்டம்; ஓயாத உழைப்பு.

இன்னும் இயேசு பிரான் ''வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்துக்கு வாருங்கள்! நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.'' — என்று அழைப்பு விடுக்கின்றார்.

அவசரப்படாமல் தெய்வ பிரசன்னத்திற்கு காத்திருப்பவனுக்கு நிம்மதி உண்டு; ஆறுதல் உண்டு; மனநிறைவு உண்டு!

இந்த வருடம் பலவித பிரச்சினைகளின் மத்தியில் நமது மக்கள் கிறிஸ்து ஜெயந்தியைக் கொண்டாடுகின்றனர். இறை மகன் யேசு அவர்கள் யாவருக்கும் மனோதிடத்தையும் சாந்தியையும் அருள்வாராக!

*—கலாநிதி வண. எஸ். ஜெபநேசன்—*
*(ஆயர், தென்னிந்தியத் திருச்சபை)*

## ''பயப்படாதிருங்கள்!'' இது ஆறுதலின் நற்செய்தி

கடவுள் மனிதனை அவனுடைய நிலையிலே சந்திப்பதற்காக மானிடக் கோலம் எடுத்த நிகழ்வே பாலகன் பிறப்பாகும். மனிதன் மீட்பின்றி பாவத்திலே மூழ்கி, பாதுகாப்பின்றி, நிச்சயமற்ற நிலையிலே வாழ்ந்துகொண்டிருந்த காலத்திலே கடவுள் தன்னுடைய தூய நிலையில் இருந்து மீட்பையும், பாதுகாப்பையும், ஆறுதலையும் மனிதனுக்கு ஈவதற்காக தூய்மையற்ற இடத்திற்கு மானிடனாக வந்தார்.

நமது ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தி அவருடைய தாயாராகிய மரியாளுக்கு தேவதூதனால் அறிவிக்கப்பட்ட வேளையிலே அவள் அவன் வார்த்தையினால் கலங்கி இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள் (பிரி. லூக்கா 1:29). பாலகன் பிறப்பின் நற்செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் மிகவும் பயந்தார்கள் (பிரி. லூக்கா 2: 9), ஏரோது ராஜாவும் அவனோடு கூட இருந்த எருசலேம் நகரத்தார் யாவரும் கலங்கினார்கள் [பரி. மத்தேயு 2: 3].

இவ்வாறு பாலகன் பிறப்பின் நற்செய்தியைக் கேட்ட யாவருக்கும் உடனடியாக சந்தோசமும், சமாதானமும், ஆறுதலும் ஏற்படவில்லை. அவர்கள் சிந்தித்தார்கள்; பயப்பட்டார்கள்; கலங்கினார்கள். இந்தநிலையிலே மரியாளுக்கும், மேய்ப்பர்களுக்கும் ''பயப்படாதிருங்கள்'' என்ற ஆறுதலின் நற்செய்தி தேவதூதனால் கொடுக்கப்பட்டது.

இன்று நாமும் கூட பாலகன் பிறப்பின் மத்தியில் எமது மீட்பு, பாதுகாப்பு, ஆறுதல் போன்ற பல காரியங்களை குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்; பயப்பட்டுக் கொண்டிருக்கிறோம்; கலங்கிக் கொண்டிருக்கிறோம். அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என்று தெரியாத ஒரு நிச்சயமற்ற நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச் சூழ்நிலையிலே கிறிஸ்துவின் பிறப்பு அர்த்தமற்றதாக இருக்குமோ என்று கூட நாம் சிந்திக்கலாம்.

இந்நிலையிலே தேவதூதனின் ''பயப்படாதிருங்கள்'' என்ற ஆறுதலின் நற்செய்தி எம்மைத் தேற்றுவதாக அமைகின்றது. பயத்தின் மத்தியில் — கலக்கத்தின் மத்தியின் — சிந்தனையின் மத்தியில் — வாழ்ந்து கொண்டிருக்கும் எமது பயங்களை நீக்கி, கலக்கங்களை அகற்றி, எமது சிந்தனைகளை அவருடைய சித்தத்திற்கமைய மாற்றி, எமக்கு ஒரு புதிய சமாதானத்தையும், ஆறுதலையும் எடுத்துரைக்க சின்னப்பாலகன் யேசு எமது உள்ளத்தில் பிறக்க இடம் கொடுப்போமாக! அப்பொழுது எமது மீட்பையும் பாதுகாப்பையும், ஆறுதலையும் பாலகன் இயேசு நமக்குத் தந்தருள்வார்.

எனவே இந்த நத்தார் காலத்திலே நமது ஆண்டவராகிய யேசுக் கிறிஸ்துவின் பிறப்பு நமது தேசத்திற்கும் நமக்கும் மீட்பையும் ஆறுதலையும் சமாதானத்தையும் பெற்றுத் தந்து ஆசீர்வதித்து ஆண்டு நடத்துவதாக.

*— அருட்திரு ஜெபமோகன் ஜெயரட்ணம் —*
*[அங்கிலிக்கன் திருச்சபை]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

றபர் முத்திரை (Rubber Stamp) செய்வதில் அனுபவமுள்ளவர்கள் (ஆண்) உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: சோதி அச்சகம், கச்சாய் வீதி (மக்கள் கடை அருகில்), சாவகச்சேரி. (39690)

சொக்கட்டான் மணப் பந்தல், மணவறை, தகரப் பந்தல், கதிரை, டெக் மொடல் ரேப்செற் நல்ல நிலையில் வாங்கப்படும். தொடர்பு கொள்ளுங்கள். வீடியோ கலாமினி, டச்றோட், சாவகச்சேரி. (39576)

### மணமகள் தேவை

இத்தாலியில் இருந்து வந்துள்ள 35 வயதுடைய (சுவாதி நட்சத்திரம்) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த படித்த அழகிய மணமகனுக்கு அழகிய 30 வயதுக்கு உட்பட்ட படித்த (A/L) மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். சாதகத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். இல: 507, C/o உதயன், பருத்தித்துறை வீதி, சரசாலை. (39573)

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, கைரேகை, அதிர்ஷ்ட எண் காலை 9.00-பிற்பகல் 1.00 வரையும் லட்சுமி தியேட்டர் ஒழுங்கை, நெல்லியடி. பிற்பகல் 3.00 மணிக்குப் பின்பு C/O பொலிஸ்ஆறுமுகம், யார்க்கரு பிள்ளையார் உரிமையாளர், கரவெட்டி கிழக்கில் சந்திக்கலாம். (C/3079)

### இட மாற்றம்

நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் பின் வீதியில் P. M. நடத்திய சோதிட நிலையம் பின்வரும் விலாசத்தில் தற்சமயம் இயங்குகின்றது. C/o. அ. பத்மநாதன், 'தீப வாசா', சியாமளா மில் ஒழுங்கை மீசாலை. (புத்தூர் சந்திக்கு அருகாமை) (39703)

யாழ்ப்பாணம், நவீன சந்தையில் இயங்கிவந்த ''ராசி சில்க்ஸ்'' தற்போது கண்டி வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (C/3053)

## இடமாற்றம்

**N. சற்குணலிங்கன்**
படப்பிடிப்பாளர்
ஸ்ரேசன் லேன்,
சாவகச்சேரி.
(கானான் தேவாலயத்திற்கு அருகில்)

நண்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்
(39681)

# மேர்ச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்

# MERCHANT FINANCE LIMITED

(555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.)

தற்காலிகமான அலுவலகம் ஒன்று பருத்தித்துறை சாரையடியில் திறக்கப்பட்டுள்ளது.

பல காரணங்களினால் தேவையான ஆவணங்கள் முதலியன யாழ்ப்பாணத்திலேயே சிக்கியுள்ளதுடன் தற்போது பாவனைக்கு இல்லாமலுள்ளன.

### தற்போதைய செயற்பாடுகள்

### வட்டி கொடுப்பனவுகள்

அ) காசாக வழங்கப்பட்ட மாதாந்த வட்டி

வாடிக்கையாளரின் நன்மை கருதி இந்தக் கொடுப்பனவு காலாண்டிற் கொருமுறை முற்பணமாக காசோலையாக வழங்கப்படும்.

ஆ) வங்கி கணக்குகளுக்கு வரவு வைக்க அனுப்பப்படும் மாதாந்த வட்டி

வாடிக்கையாளர்கள் தங்களது வைப்புகள் சம்பந்தமான விவரங்கள், இறுதியாக எம்மால் வங்கிக்கு வரவு வைக்கும்படி அனுப்பப்பட்ட கடிதத்தின் தங்களது பிரதி இவற்றுடன் எம்முடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

இ) வருடாந்த வட்டி

வாடிக்கையாளர்கள் தங்களது வைப்புகள் சம்பந்தமான விவரங்களுடனும், முதிர்வு திகதியுடனும் எம்முடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். கொடுப்பனவுகள் காசோலையாகவே உங்கள் அறிவுறுத்தலின்படி வழங்கப்படும்.

### வைப்புகள் மீளளிப்பு

வழமைபோல் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் மீளளிப்புகள் பெற்றுக் கொள்ளலாம்.

### வாடகை கொள்வனவும், வாடிக்கையாளர்களும்

இரு தரப்பினரது சௌகரியமும் நன்மையும் கருதி தயவு செய்து உங்களது இறுதியாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொண்டு வந்து காண்பித்து நிலுவைகளை ஒழுங்காக செலுத்துங்கள்.

20-12-95

அ. சோமசுந்தரம்பிள்ளை
முகாமைத்துவ இயக்குனர்
(சி-3063)

## எழுதுவினைஞர் பரீட்சை

அரச எழுதுவினைஞர் தரம் 2க்கான பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

வடபகுதிக்கான பரீட்சை நிலையம் கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர் [ஐ-3]

## 15 சடலங்கள் அரச செலவில் அடக்கம்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த நவம்பர் மாதத்தில் 15 சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன. இவற்றுள்பெரும்பாலானவை இடம்பெயர்ந்த மக்களின் சடலங்கள்என்றுதெரிவிக்கப்பட்டது.

இறுதிக் கிரியைடளை செய்வதற்கு பணவசதி, இடவசதிஇல்லாததால் அரசசெலவில் அடக்கம் செய்ய அனுமதிக்கின்றனர் என்று கூறப்படுகிறது. [இ-173]

## பாடசாலைகளை திறக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பகுதியில் மூடப் பட்டுள்ள 6 பாடசாலைகளை மீண்டும் இயங்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கிளிநொச்சி பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெவித்துள்ளார். (ஐ-3)

## அன்பளிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள உடல் வலுவிழந்த ஒருவருக்கு முச்சக்கர வண்டியினையும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள உழைப்பாளரை இழந்த பெண் ஒருவருக்கு தையல் இயந்திரத்தினையும், ஏற்கனவே கண் பரிசோதனை செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 50 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளையும் அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி வள்ளிப்பிள்ளை விநாயகம்

(முன்னைநாள் பிரதம தபாலதிபரான அமரர் பரமு விநாயகத்தின் அன்பு மனைவி)

அன்னையின் மடியில்: 7-04-1910
ஆண்டவனின் அடியில்: 5-01-1995

திதி: 25 - 12 - 1995

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும்
நல்வழி காட்டிய தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு
ஆனாலும் உங்கள் நினைவும், பாசமும் என்றும்
எங்களை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நீங்காத நினைவுகளுடன் வாழும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

'பத்மவாசா',
கந்த உடையார் ஒழுங்கை,
புலோலி மத்தி,
பருத்தித்துறை.
(சி/3062)

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

# 'மகாநதி'யின்

# சிறப்புத் தள்ளுபடி விற்பனை

மிடுக்கான ஆடவர்க்கேற்ப

- ★ அட்டகாச டிசைன்களில் சேட், T சேட், சூட்டிங் வகைகள்

சுந்தரிப் பெண்களுக்கேற்ற

- ★ இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த ஸ்கேட் அன் பிளவுஸ், T சேட்ஸ், கவுண், சாறி வகைகள்

மற்றும்

திருமண பட்டுச் சேலைகள், பட்டு வேட்டிகள், சகலவிதமான ரவிக்கைத் துணிகளுக்கும்

# மகாநதி புடைவை அகம்

இல.4, சிறப்பு அங்காடி, — சாவகச்சேரி.
(சி-2916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வன்னியும் பெத்தலேகமும்

இன்று கிறிஸ்மஸ்.

மக்களை மீட்பதற்காக மாசுதன் மனித வடிவிலே அவனியில் அவதரித்த இந்த நிகழ்வு, மனித வாழ்க்கையின் ''விடுவிப்பு'' பயணத்தின் ஆரம்பம்.

தம்மக்களை அவர் தேடி வந்து அவர்களை விடுவித்தருளினார்; மனுக்குலத்துக்கே விடுதலையைப் பெற்றுத்தர வழிகாட்டினார்.

யேசுவின் போதனைகளும் வழிகாட்டலும் அடங்கிய இறையியல் முழு மனித விடுதலைக்கு வழிகாட்டுகின்றது.

அந்த முழு மனித விடுதலை என்ற பெரு வழிக்கு இடையில் — நீண்ட பயணத்துக்கு இடையில் — நாம் கடக்க வேண்டிய பல மைல் கற்கள் இருக்கின்றன; பல விடுதலைப் பயணங்கள் இருக்கின்றன.

அத்தகைய ஒரு விடுதலைப் பயணத்தையே இன்று ஈழத் தமிழ்மக்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள். பல்வேறு அடக்கு முறைகளுக்கு எதிரான விடுதலைப் போராட்டமே அது.

பாலன் யேசு மனுக்குலத்துக்குக் காட்டிய விடுதலைப் பயணம், எமது இன்றைய இன விடுதலைப் போராட்டத்துக்கும் ஒரு சிறந்த வழிகாட்டுதலாக உள்ளது.

யேசு மனுக்குலத்தின் விடுதலைக்காக — மேம்பாட்டுக்காக — தன்னையே தியாகம் செய்தார்; பாடுகளைச் சுமந்தார்; இன்னலுற்ற மக்களுக்காக இன்னல்களை ஏற்றுக் கொண்டார்; தன் சீடர்களின் பாதங்களைக் கூடக் கழுவினார்; சிலுவை சுமந்து, இரத்தம் சிந்தினார்.

அவரது இந்தத் தியாக சீலம் தமது போராட்டத்துக்காக ஈழத் தமிழர் செய்ய வேண்டிய தியாகங்களை அவர்களுக்கு நினைவூட்டுவதாக இருக்கின்றது.

இன்று குடா நாட்டு மக்கள் ஏதிலிகளாக இடம்பெயர்ந்து வந்தது போலவே 1995 ஆண்டுகளுக்கு முன்னர், சூசையப்பரும் அன்னை மரியாளும் இடம்பெயர்ந்து வந்து பல வீடுகளைத் தட்டினர்; சத்திரங்களில் கூட அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பெத்தலேகமில் மாட்டுத் தொழுவத்தில்தான் விடுவிப்புக்கு வழி காட்டிய பாலன் யேசுவின் பிறப்பு நிகழ்ந்தது; வாழ்வு ஆரம்பித்தது. இடம் பெயர்ந்த குடாநாட்டு மக்களின் இன்றைய வாழ்வும் வன்னியிலும், தென்மராட்சியிலும் இத்தகைய கொட்டில்களில்தான் ஆரம்பமாகியிருக்கின்றது.

பாலன் யேசுவை அழிக்க முற்பட்ட ஏரோது மன்னன் போல ஈழத்தமிழரை அழிக்க முற்பட்டிருக்கின்றது அரசு.

மனிதனின் விடுவிப்புக்காக யேசு எத்துணை தியாகங்களைப் புரிந்தாரோ அது போன்று ஈழத் தமிழினத்தின் விடுதலைக்கும் நாம் பல தியாகங்களைப் புரிய வேண்டியிருக்கும்; பாடுகளைச் சுமக்க வேண்டியிருக்கும்.

அதற்கு, யேசுபிரான் வாழ்வும் வழிகாட்டுதலும் எமக்கு முன்மாதிரியாக இருப்பதோடு ஆத்ம பலத்தையும் உற்சாகத்தையும் தருவதாகவும் இருக்கும்,

வெறும் மிரட்டல்களுக்கு — அச்சமூட்ட வைக்கும் நெருக்கடிகளுக்கு — கொடுமைகளுக்கு — பயந்து தமது நம்பிக்கையை கைவிட்டவரல்லர் யேசுபிரான். சிலுவையில் அறையப்பட்ட போதும் தமது விசுவாசத்தில் விடாப் பிடியாக நின்றவர் அவர்.

இந்த விசுவாசமே, பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தளராது தலை நிமிர்ந்து நிற்பதற்கு இன்று ஈழத் தமிழர்களுக்கு வேண்டியதாக இருக்கின்றது.

# பெரும் தீ விபத்தில் சிக்கி இந்தியாவில் 590 பேர் பலி

## அதிகமானோர் பள்ளிச் சிறார்கள்

புதுடில்லி, டிச. 25

வட இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட பெரும் தீ அனர்த்தத்தினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 590 ஆக உயர்ந்துள்ளது.

புதுடில்லிக்கு வடக்கே 250 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தர்பாளி என்ற நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆண்டுவிழா நடந்து கொண்டிருந்த கட்டடத்திலேயே இத் தீ விபத்து ஏற்பட்டது.

ஐந்து வயதுக்கும், 15 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 2 ஆயிரம் சிறுவர்களும், அவர்களது பெற்றோர்களும் அந்த மண்டபத்தில் கூடியிருந்தபோது தீ பற்றிக்கொண்டது.

தீக்கிரையான கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து சடலங்கள் இன்னமும் மீட்கப்பட்டு வருகின்றன. காயமடைந்த சிறுவர்கள் பல ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மின்சாரக் கோளாறினாலேயே இத்தீவிபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. மின் ஒழுக்கினால் பொலியஸ்ரர் கூடாரம் தீப்பிடித்துக் கொண்டது. பின்னர் தீ அருகில் இருந்த வாயு சிலிண்டர்களில் பற்றியதும் ஐந்து நிமிட நேரத்தினுள் விழாக் கட்டடம் முழுவதுமே தீயினால் சூழப்பட்டது.

மண்டபத்தை தீ சூழ்ந்ததும் சிறு வழி ஒன்றினூடாக வெளியே தப்பமுயன்ற சமயமே சிறார்கள் தீயில் கருகி மாண்டனர். பலர் நெரிசலுக்குள் அகப்பட்டு மூச்சுத் திணறியும் உயிரிழந்துள்ளனர். (ஐ)

# இம்முறை கிறிஸ்மஸ் அமைதியாக அனுஷ்டிப்பு

வடமராட்சி, டிச. 25

வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப்பிரதேசங்களில் கிறிஸ்தவ மக்கள் நத்தார் தினத்தை என்றுமில்லாதவாறு மிகவும் எளிமையாக இன்று கொண்டாடுகிறார்கள்.

வழமையான நந்தார் சலகலப்பு எதையும் இம்முறை காணவில்லை. புத்தாடைகளை கொள்வனவு செய்தல், கரோல், ஒளிவிழாக்கள், ஆலயங்களை அலங்கரித்தல் என்பனவற்றை இம் முறை காண முடியவில்லை.

யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் துன்புற்றிருக்கும் மக்களின் நிலைமைகளைப் புரிந்து கொண்டு இம்முறை நத்தார் கொண்டாட்டம் எளிமையாகக் கொண்டப்படுவதாக கிறிஸ்தவ சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பல தேவாலயங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-173]

## புதனன்று 'மாஹோ' வரும்

ஒருதொகுதி பொருள்களுடன் ''மாஹோ'' கப்பல் நாளை மறுதினம் திருகோணமலையிலிருந்து பருத்தித்துறை துறைமுகம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்துள்ள ''லங்கா முடித'' கப்பல் பொருள்களை இறக்கி முடிக்க இன்னமும் சில தினங்கள் பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-173)

## மேற்கு வங்க மாநிலத்தில்

# விமானம் வீசிய ஆயுதங்கள்; பெறுமதி ரூபா 35 கோடி!

கலகத்தா, டிச. 25

மேற்கு வங்க மாநிலத்தில் அண்மையில் வெளிநாட்டு விமானம் ஒன்று வீசிய நவீன ஆயுதங்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் பாதுகாப்பு படையினரும், பொலீஸாரும் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த விமானம் வீசிய பெருந் தொகையான ஆயுதங்கள் ஏற்கனவே மீட்கப்பட்டிருக்கின்றன.

ஹூர்தியா மாவட்டத்தில் மேலும் சில பகுதிகளில் இரவிரவாகத் தேடுதல் நடத்தப்படுகிறது.

சுமார் 35 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் விமானத்தில் இருந்து வீசப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தாங்கள் எடுத்துச் சென்ற ஆயுதங்களை நாளை செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் திருப்பி ஒப்படைத்து விடுமாறு கிராமவாசிகளுக்கு பொலீஸார் கால அவகாசம் விதித்துள்ளனர். (ஐ)

## முழு மனித விடுதலைப்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனங்கள் இருக்கின்றன. உண்மைக்கெதிராக, நீதிக்கெதிராக, எத்தனையோ கொடுமைகள் திணிக்கப்படுகின்றன. தமிழ் மக்களைத் துன்புறுத்தும் எத்தனையோ அடிமைத் தனங்கள், அநீதிகள் இருக்கின்றன. சாதி வேறுபாடுகள், பெண் அடிமைத்தனம், சீதனச் சுமைகள் இப்படிப் பல ஊறி உறைந்து இருக்கின்றன. இவ்வடிமைத் தனங்களை இனம் கண்டுகொள்ளாதவன் — இவைகளுக்கெதிராக போராடாதவன் — கிறீஸ்தவ கடமையில் தவறுகின்றான்.

இதேபோன்று, தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில், மனித அடிப்படை உரிமைகளை மீட்டெடுப்பதற்காக போராட்டமொன்று கடந்த நாற்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இதற்குள்ளே கடந்த [illegible] வருடங்களாக [illegible] கோரும் போர் ஒன்று நடக்கின்றது. இதன் காரணமாக நாம் போரையே வேரோடு வெறுக்கவேண்டும். அவற்றை முடிவுக்கு கொண்டுவர, சமாதானத்தை ஏற்படுத்த, மும்முரமான முயற்சிகள் எடுக்க வேண்டும். போராட்டத்தின் வலிமையை குறைக்காது, போரை நிறுத்த அரசியல் தலைவர்களுக்கு மேலாக மதத்தலைவர்கள் மும்முரமாக உழைக்கவேண்டும். இது அவர்களின் தலையாய கடமையாகும்.

ஆகையால் விழிப்பாயிருந்து, நடக்கும் சம்பவங்களை, முழு மனித விடுதலைப் பயணத்தின் பின்னணியிலும் நற்செய்தியின் ஒளியிலும் எடை போட்டு கணிக்க வேண்டும். முழு மனித விடுதலைக்குள்ளே பல மனித விடுதலைகள் அடங்கியிருக்கின்றன என்பதை உணர்ந்து அவ[illegible] பங்கெடுப்பது எமது கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு நடைமுறைகள்

சாவகச்சேரி, டிச. 25

இவ்வாண்டுக்கான தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்பு தொடர்பான, நடைமுறைகளை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:-

1. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கடன் பத்திரத்தை வைத்திருப்பவர்களுக்கான மீளளிப்பு முதற் கட்டமாக நடைபெறும்
   ஆ) கடன் பத்திரத்தை தவறவிட்டவர்களுக்கு மீளளிப்பு இரண்டாம் கட்டமாக நடைபெறும். இது தொடர்பான நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும். இதனை தயவு செய்து கருத்திற் கொண்டு எம்முடன் முழுமையாக ஒத்துழைக்குமாறு கடன் பத்திரத்தை தவறவிட்டவர்களை பணிவன்புடன் வேண்டுகிறோம்
2. கடன் பத்திரதாரர்கள் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.
3. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகை தர வேண்டும்.
4. கடன் பத்திரதாரர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.
   அ) இறப்புச் சான்றிதழ்.
   ஆ) இறப்புச் சான்றிதழின் பிரதி.
   இ) பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்.
   ஈ) பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரின் கடிதம்.
   உ) கடன் பத்திரம்.
6. கடன் பத்திரத்திலுள் முழுப்பெயரும், அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாள யாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
6. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர்கள் தமது அடையாள ஆவணத்தை காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.
   ஆ) அடையாள ஆவணம் அற்றவர்கள் தமது புகைப்படத்தை (2.5 அங் x 2 அங். அளவு) அதன் பினபுறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.
   இ) இவ்வாறு செய்ய முடியாதவர்களுக்கான மீளளிப்பு, கடன் பத்திரத்தைத் தவறவிட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட மீளளிப்பின் போது மேற்கொள்ளப்படும். இது பற்றிய நடைமுறை பின்னர் அறிவிக்கப்படும்.

[ஐ]

# திருமலை அரச வங்கிகளில் சிங்களவர் இல்லையாம்!

## சிங்களவர்கள் போர்க் கொடி

திருகோணமலையில் இயங்கும் மக்கள் வங்கியிலும், இலங்கை வங்கியிலும் ஒரு சிங்கள ஊழியராவது இல்லையாம்.

இதன் காரணமாக தாம் மாற்றன் தாய் மனப்பான்மையுடன் கவனிக்கப்படுவதாக திருகோணமலை சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினரான சிங்களவர்கள் தெரிவிப்பதாக 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி ளியிட்டுள்ளது.

திருகோணமலையில் உள்ள ஒரே ஒரு தனியார் வங்கியான ஹட்டன் நஷனல் வங்கியில் இரு சிங்களவர்கள் கடமை ஆற்றுகின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாம்.

# வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

சாவகச்சேரி, டிச. 25

பின்வரும் விலாசதாரர்களை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ இராமநாதர் சோதிலிங்கம் — இராமநாதர் கடை, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

★ திருமதி கிருஷ்ணபிள்ளை நகுலேஸ்வரி — 70, ஆனந்தன் வடலி றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

★ திருமதி துரைராஜா கனகம்மா —30/1, மலர் மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ திருமதி வர்ணேந்திரன் றங்கதேவி—110, கச்சேரி — நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ். கே. கந்தசாமி — பாதுகாப்புப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

★ திருமதி முத்துக்குமார் ராஜலட்சுமி (மாஸ்ரர்) —38, இராசாவீதி, நல்லூர், — யாழ்ப்பாணம்.

★ திருமதி பேரின்பநாயகம் யோகமலர் — விதானையார் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்

★ திருமதி சரஸ்வதி சின்னத்துரை — 131/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

★ கார்த்திகேசு ஜனகதாசன் — 12/85, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ சோதி இராசநாயகம் — அம்மன் கோவிலடி, உரும்பிராய்.

★ திருமதி மகாதேவி கந்தையா (ஆசிரியர்) — குறுக்குத்தெரு, நல்லூர்.

★ கந்தையா சுப்பிரமணியம்—203, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ பரமானந்தன் கணபதிப்பிள்ளை — 97, சந்தோசம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (ஐ)

# கொழும்பு ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

கொழும்பு, டிச. 25

போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இரு கோஷ்டிகளுக்கு இடையில் ஏற்பட்ட தகராற்றையடுத்து கொழும்பு பொது மருத்துவமனையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு பொது மருத்துவமனை விபத்து காய நோயாளர் பிரிவில் நடந்த இந்தச் சம்பவத்தில் ஸ்ரான்லி சண்முகம் யேசப், அவரது சகோதரர் அன்ரன் ராஜ் ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இருவரும் ஆஸ்பத்திரி அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-3)


## வைத்தியம்

வாதம், செங்கமாரி (Hepatitis), மூலவியாதி, தொய்வு, குழந்தைகளுக்கான வைத்தியம் போன்ற சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

முகவரி:-

தங்கபாஸ்கரன் வைத்தியசாலை
நல்லூர்.
(கிளை:- உரும்பராய்.)

தற்போதைய முகவரி:

மே/பா. K. K. ஆனந்த்,
ஐயனார் கோவிலடி, கொடிகாமம்.

வைத்திய கலாநிதி செ. வல்லிபுரம்



நத்தார் புதுவருட
★ மலிவு விற்பனை ★

இன்று முதல் கொடிகாமம் நவீன சந்தையில் மற்றுமோர் ஸ்தாபனம்

## கோபிகா ஆடை அகம்

(ராகமாளிகா)

இல- 3, நவீன சந்தை, கொடிகாமம்.

சகல விதமான புடைவை வகைகளுக்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்

[சி-3069]


# வடக்கு-கிழக்கு அரச ஊழியர் விவரம் கோருகிறது ஜனாதிபதி செயலகம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசதிணைக்களங்களில் பணிபுரியும் சகல உத்தியோகத்தர்களின் விவரங்களையும் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

இந்த விவரங்களை உடன் சமர்ப்பிக்குமாறு வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து —

மாகாண சபை யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களங்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

வ.கி.மா/க.அ./பி எல்./36 இலக்கமுடைய 11 - 12 - 95 திகதியிடப்பட்ட இந்த சுற்றறிக்கையில் இது தொடர்பான விவரங்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது. (உ-15-11)

# மானமுள்ள தமிழராக வாழ்வதற்கு விடுதலைக்காக போராட வேண்டும்

## போர்க்காலக் கருத்தரங்கில் உரை

சாவகச்சேரி, டிச. 25

தமிழ் மக்களாகிய நாம் அடிமைகளாக வாழ முடியாது. வீரம், மானம், பண்பாடு எமது சொத்துக்கள். எனவே மானமுள்ள தமிழனாக வாழ தமிழீழ மக்களாகிய நாம் விடுதலைப் புலிகளுடன் இணைந்து விடுதலைக்காக போராட வேண்டும்.

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கருத்துரை வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு.சங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் எமது வாழ்வு, கல்வி என்பவற்றுக்காகப் போராட வேண்டும் ஸ்ரீலங்கா அரசு எம் மீது படை நடவடிக்கையை கட்டவிழ்த்து விடுவதற்காக, கொழும்பு மாநகரில் பாடசாலைகளை மூடிவைத்துள்ளது. அங்கே பாடசாலை மாணவர்களை சிங்களப் படைகளில் சேர்ந்துக் கொள்ளுகிறார்கள் ஏனெனில்—

எமது தமிழ்ப் பிரதேசங்களை, தமிழர் நிலங்களை, சொத்துக்களை ஆக்கிரமிப்பதற்காக.

எனவே —

பலமுள்ள இளைஞர்கள் போராட்டத்தில் இணையுங்கள்; மாயைகளை உடையுங்கள்; காலத்தைக் கடத்தாதீர்கள்; சாவதா, வாழ்வதா என்ற நிலையில் இருந்து விடுதலை பெறுங்கள்.

இன்று பட்டம் பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள், ஆசிரிய ஆசிரியைகள் என பலரும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து வருகின்றனர்.

எமது பாரம்பரிய யாழ். பிரதேசத்தில் உள்ள 45 ஆயிரம் படையினரையும் முடிவு கட்ட வேண்டும்.

அங்கு தரித்து நிற்கும் யுத்த டாங்கிகளுக்கும், அவர்களது ஆயுதங்களுக்கும் முடிவு கட்ட வேண்டும் அங்கு முற்றுகையிட்டுள்ள படையினருக்கு எமது பிரதேசத்திலேயே புதைகுழி வெட்ட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் மன உறுதிக்கும், இலட்சியத்திற்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இராணுவ அச்சுறுத்தல் மூலம் எம் மீது அழுத்தங்களை சுமத்த முடியாது. எமது தமிழீழ விடுதலைக்கான போராட்டம் பின்னடையப் போவதில்லை. எனவே காலத்தின் தேவை உணர்ந்து எம்முடன் இணையுங்கள்.— என்றார். (இ-31)

## அனுமதி அட்டை விநியோகம்

தமிழீழ வைப்பகத்தின் இளநிலை எழுதுநர், உதவிக் காசாளர் பணிநிலைக்கு விண்ணப்பித்த வலிகாமம், இடம்பெயர்ந்த விண்ணப்பதாரிகள் எழுத்துத் தேர்விற்கான தமது அனுமதி அட்டையை சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்தில் நாளை செவ்வாய்க்கிழமையிலிருந்து எதிர்வரும் வியாழக்கிழமை வரை வைப்பகப் பணி நேரங்களில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

அயுத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது பதவியில் உள்ள அமைச்சர் ஒருவரின் செயலாளரின் மகனே முக்கிய தரகராகச் செயற்பட்டார் என்றும் —

ஆயுதக் கொள்வனவுக்கான பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு முன்னரே கடந்த செப்டெம்பர் 19 ஆம் திகதி இந்தக் கொள்வனவுக்கான பணம் வங்கி ஒன்றின் ஊடாக சீனாவில் உள்ள ஆயுதக் கம்பனிக்கு செலுத்தப்பட்டு விட்டது என்றும் —

எனினும் சில நாட்கள் கழித்து சம்பந்தப்பட்ட கடிதம் ஒன்றில் பாதுகாப்பு அமைச்சிசரின் கையொப்பம் பெறப்பட்டது என்றும் —

ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஊழல் சம்பவம் தொடர்பான ஆவணங்களை அண்மையில் ஐ. தே. கவின் செயலாளர் காமினி அத்துக்கோறளை பத்திரிகையாளர்களுக்கு வழங்கியிருந்தார் என்றும் —

ஆனால் அன்றிரவே செய்தி தணிக்கையை நடைமுறைக்குக் கொண்டு வந்ததன் மூலம் ஆயுதக் கொள்வனவு ஊழல் பற்றிய விடயங்கள் பத்திரிகைகளில் வெளிவராமல் அரசு தடுத்துவிட்டது என்றும் கூறப்படுகின்றது.

தற்போது செய்தித் தணிக்கை முறை நீக்கப்பட்டிருப்பதை அடுத்து —

புதிய ஆதாரங்களுடன் இந்த ஊழலை வெளிப்படுத்தும் முயற்சியில் ஐ தே. க. ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-9)

யாழ்ப்பாணத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள ராணுவம் இரத்த ஆறை ஓடவைத்துள்ளது.

அத்தோடு இடம்பெயர்ந்த மக்களுக்கு எந்தவித உதவியும் வழங்காது பாராமுகமாக ஸ்ரீலங்கா அரசு உள்ளது — என்றும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (உ-3)

## சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த

# யாழ். நகரில் இருந்து படையினரை விலக்குக!

## ந.ச.ச. கட்சித் தலைவர் கோரிக்கை

யாழ். நகரை பாதுகாப்புப் படையினர் கைவிட்டு கூடிய விரைவில் அங்கு சிவில் நிர்வாகத்தை கொண்டு வரவேண்டும்.

—இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கோரியுள்ளார்.

கொழும்பு நிப்பென் ஹோட்டலில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக புலிகள் இயக்கம் நடத்திவரும் உரிமைப் போராட்டத்தை நாம் ஆதரிக்கின்றோம்.

யாழ். நகரை பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளபோதிலும், அங்கு சிவில் நிர்வாகத்தை கொண்டுவர வேண்டுமாயின் முதலில் இராணுவத்தை அப்புறப்படுத்தி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என நாம் அரசை வற்புறுத்துகின்றோம்.

வடபகுதியைப் படையினர் கட்டுப்பாட்டில் கொண்டுவர எடுத்த இராணுவ நடவடிக்கையை கண்டிக்கிறோம். — என்றார். (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி டில்லி ஜெயராணி

அராலி வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், தற்போது தச்சன் தோப்பு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி ச. டில்லி ஜெயராணி நேற்று காலமானார்.

அன்னார் சதாசிவம் பிறேம்குமார் (புனர்வாழ்வு அலுவலகம், யாழ். செயலகம், தலைவர் — பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கைதடி) அவர்களின் அன்புத் தாயாரும், மல்லிகாதேவியின் மாமியாரும், நிரோஜனன், அனோஜனன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்

தகனக் கிரியை வேம்பிராய் இந்து மயானத்தில் நேற்று நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. பிறேம்குமார்
(மகன்)

தச்சன் தோப்பு,
கைதடி.

(39593)

## முத்துப்பிள்ளை கார்த்திகேசு

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முத்துப்பிள்ளை நேற்று (24-12-95) காலமானர்.

இவர் காலஞ் சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், கந்தசாமி, முத்துலிங்கம், அம்பிகாபதி, பாலசுப்பிரமணியம், கனகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகேஸ்வரி, சரஸ்வதி, தயாநிதி, தங்கராணி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவர்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-12-95) பி.ப 2.00 மணியளவில் நுணாவில் கிழக்கு உறவினர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
அம்பிகாபதி (சின்னத்தம்பி)
(மகன்)

497, நுணாவில் கிழக்கு,
(யூனியன் பேக்கரி அருகாமை)
சாவகச்சேரி.

(39592)


நத்தார், புதுவருடப்பிறப்பை
முன்னிட்டு
மாபெரும்

## மலிவு விற்பனை

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல

★ புடைவை வகைகள்
★ அழகுசாதனப் பொருள்களுக்கும்

இன்றே நாடுங்கள்

## ரவி அன் ராஜ் ஆடையகம்

இல. 77, பெரியகடை, யாழ்ப்பாணம்.
இல. 163, பிரதான வீதி, பருத்தித்துறை.

## மகளிர் கோட்டம்

இல. 81, பெரியகடை, யாழ்ப்பாணம்.
இல. 163, பிரதான வீதி, பருத்தித்துறை. (ரஞ்சன் பூங்கா அருகில்)

(சி/3080)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 25-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org